DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THIRUVADANAI

| | | |
|---|---|---|
| Calendar | ... | |
| Miscellaneous | ... | |
| Preliminary Register | ... | Case No: C.C. No. 97/2024 |
| Session | ... | |
| | | Prosecution / PW–1 |
| Deposition of Witness for | ... | Defence / Court |

---

| | | |
|---|---|---|
| Name | : | திரு.சரவணன் |
| Father's Name (or) | | |
| Husband Name | : | த/பெ. |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

(Accused absent. u/s 355 BNSS petition filed and allowed.)
Solemnly affirmed in accordance with provisions of Act X of 1873 the day of 05.03.2026

---

**<u>முதல் விசாரணை</u>**

1. 1. நான் தற்போது தொண்டி காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணியாற்றி வருகிறேன். கடந்த 11.10.2024 தேதி காலை சுமார் 10.00 மணியளவில் தொண்டி காவல் நிலைய சார்பு ஆய்வாளர் சுல்தான் இப்ராகிம் அவர்கள் தலைமையில் நானும் காவலர் 2381 ராமச்சந்திரன் என்பவரும் பார்டி சகிதம் தொண்டி காவல் நிலைய சரகத்திற்கு உட்பட்ட பகுதிகளில் மது விலக்கு சம்மந்தமாக ரோந்து சுற்றி வரும்போது எங்களுக்கு கிடைத்த ரகசிய தகவலின் படி தொண்டி உருளைக்கல்

அரசு மதுபான கடை அருகே உள்ள கருவேல காட்டில் சாக்குபையுடன் சந்தேகப்படும்படியாக நின்று கொண்டிருந்த ஒருவரை பிடித்து விசாரிக்க அவர் தனது பெயர் அருள்ரமேஷ் வயது 33/24, த/பெ.பிச்சைமுத்து தோப்பு தெரு,சோழகன்பேட்டை, மருங்கூரை சேர்ந்தவர் என்றும் கூறினார்.

அவர் வைத்திருந்த சாக்குபையை சோதனை செய்தபோது அரசு முத்திரையுடன் 180 ml Express Brandy பாட்டில்கள் 04 எண்ணம் இருந்தன. அதை பற்றி கேட்டபோது அவர் சுயலாபம் கருதி விற்பனைக்காக வைத்திருப்பதாக கூறினார். அரசு அனுமதி இல்லாமல் சட்டவிரோதமாக மதுபாட்டில்கள் விற்பனைக்கு வைத்திருந்த குற்றத்திற்காக அவரை காரணம் கூறி 10.00 மணியளவில் கைதுசெய்து தனி நபர் சாட்சிகள் யாரும் முன்வராததால் எங்கள் இருவர் முனனிலையில் 10.15 மணியளவில் அத்தாட்சியில் சார்பு ஆய்வாளர் மேற்படி மதுபாட்டில்களை கைப்பற்றினார் என்னிடம் காட்டப்படும் அத்தாட்சியில் உள்ள முதலாவது கையெழுத்து என்னுயைடதுதான். அது அ.சா,.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. அந்த அத்தாட்சி காவல நிலையத்தில் வைத்து பிறப்பிக்கப்பட்ட அத்தாட்சி ஆகும்.

2. சம்பவயிடத்தில் வைத்து எங்கள் முன்னிலையில் சார்பு ஆய்வாளர் மேற்படி பாட்டில்களை கொட்டி அழித்து பின் 10.30 மணிக்கு நிலையம் வந்து நிலைய குற்ற எண்..209/24 u/s 4(1)(C) TNP Act ஆக வழக்கு பதிவுசெய்ய சார்பு ஆயவாளருககு உதவியாக இருநதேன். இது சம்மந்தமாக சார்பு ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

1.சமபவசமயத்தில் தொண்டி காவல்நிலையத்தில் நிலைய பொறுப்பு அதிகாரி சார்பு ஆ,யவாளர் என்றால் சரிதான். சம்பவசமயத்தில் தொண்டிக்கும் எஸ் பி பட்டினத்திற்கும் வட்டார ஆய்வாளர் பணியாற்றி வந்தார் என்றால் சரிதான். சம்பவசமயத்தில் நான் காவல் வட்டார ஆய்வாளரின் எழுத்தராக பணிபுரிந்தேன் என்றால் சரிதான். பொதுவாக எழுத்தர்களை ரோந்து பணிக்கு அனுப்பமாட்டர்கள் என்றால் சரியல்ல. ஆட்கள்இலலாத நேரத்தில் தேவைப்பட்டால் அனுப்புவார்கள். எனது அன்றாட பணிகளை பாக்கெட்நோட்டில் குறிப்பிடுவது வழக்கம் என்றால் சரிதான். ஒவ்வொரு நாளும் செய்யக்கூடிய பணிகளை அதில் குறிப்பிட்டு அதனை ஆய்வாளர் சரிபார்த்து

கையொப்பம் இடுவார் என்றால் சரிதான். உயர் அதிகாரிகள் எப்போது வேண்டுமென்றாலும் பார்த்து கையொப்பம் இடுவார்கள். உருளைக்கல் டாஸ்மாக் அருகே தான் வழக்கு சம்பவம் நடைபெற்றதாக சொல்லப்படுகிறது என்றால் சரிதான். உருளைகல் டாஸ்மார்க் அருகே அங்கீகரிக்கப்பட்ட மது பான கடை உள்ளது என்றால் சரிதான். சம்பவயிடத் தை சுற்றி வீடுகள் மற்றும் கடைகள் உள்ளளது என்றால் இல்லை.

2.சம்பவ சமயத்தில் சம்பவயிடத்தில் பொதுமக்கள் யாரும்இல்லை. சார்பு ஆய்வளார் எத்தனை பொதுமக்களை சாட்சியாக இருக்கும்படி விசாரித்தாரா என்றால் சம்பவயிடத்தில் வைத்து சார்பு ஆய்வாளர் பொதுமக்களை விசாரிக்கவில்லை. கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் மதுபாட்டில்கள் தமிழ்நாடு அரசால் அங்கீகரிக்கப்பட்ட மதுபாட்டில்கள் என்றால் சரிதான். ஒவ்வொரு பாட்டில்களுக்கும் வரிசை எண் மற்றும் கலாவதி தேதி குறிப்பிடப்பட்டிருக்கும் என்றால் சரிதான். கைப்பற்றப்பட்ட மதுபாட்டில்களின் வரிசை எண்களை பார்த்தோமா என்றால் இல்லை. வழக்குசொத்துகளில் வரிசை எண்கள் குறிப்பிடப்பட்டிருந்தால் அதனை அத்தாட்சியில் குறிப்பிடவேண்டும் என்றால் சரிதான். இவ்வழக்கின் அத்தாட்சியில் வரிசை எண்கள் குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.

3.எதிரி லாப நோக்கத்துடன் விற்பனைசெய்வதற்கு தான் மதுபாட்டில்களை வைத்திருந்தார் என்ற எப்படி தெரிந்துகொண்டோம் என்றால் சம்பவயிடத்தில் சாக்குபையுடன் மதுபாட்டில்களை வைத்து நிற்க வேண்டிய அவசியம் எதிரிக்கு இல்லை அதனால் விற்பனைக்கு வைத்திருந்த விபரத்தை தெரிந்துகொண்டோம். எதிரியிடமிருந்து ஒப்புதல்வாக்குமூலம் பதிவு செய்யப்படவில்லை என்றால்ச ரிதான். சம்பவயிடத்தில வைத்து அத்தாட்சி தயார் செய்யப்படவில்லை என்றால் சரிதான். வழக்குகளில் வழக்கு சொத்துகளை கைப்பற்றும் இடத்தில் வைத்துதான் அத்தாட்சி தயார்செய்யப்படவேண்டும் என்றால் சரிதான். எந்த உயர் அதிகாரியின் உத்தரவின் பேரில் வழக்கு சொத்து கொட்டி அழிக்கப்பட்டது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் அது பற்றி தெரியாது. வழக்கில் அழித்தல் மகசர் தயார்செய்யப்படவில்லை என்றால் சரிதான்.

நான் சொன்னவாறு சொன்ன தேதியில் சம்பவயிடத்திற்கு ரோந்து செல்லவில்லை என்றும் புள்ளி விவர கணக்கிற்காக வேறு விதத்தில் கைப்பற்றிய வழக்கு சொத்தை வைத்து எதிரி மீது வழக்கு தாக்கல்செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எனது உயர்அதிகாரிகளின் உத்தரவின் பேரில் நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me/before me in
open court,interpreted/read over
to the witness and admitted by the
deponent to be correct.

Sd.-/J.Antony Rishandev,
Judicial Magistrate,
Thiruvadanai.